2016 ஆகஸ்ட் 11]

ஆட்சியிலேதான் உலகிற்கே ஆடையைத் தருகின்ற நெசவாளர்களுக்கு சூரிய மின் சக்தியுடன்கூடிய 10,000 பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் 604 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில், எனது பல்லடம் தொகுதிக்குட்பட்ட காமநாயக்கன்பாளையத்தில் 97 பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, நெசவாளர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றார்கள். காமநாயக்கன்பாளையத்திலும் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியிலும் அதிகளவில் நெசவாளர்கள் வசித்து வருகின்றார்கள். நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்று, சட்ட விதிகளுக்குட்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து, கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

புதிய அலுவலகக் கட்டடம்

***2602 திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் நல்ல நிலைமையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரிய அறிவிப்புகளால், சீரிய திட்டங்களால், கூரிய நோக்கங்களால், வாரி வழங்கும் உதவியால், மாரி மழைபோல் உலகைக் காக்கும் மணிமேகலையாய் விளங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து, என்னுடைய வினாவைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு கோட்டாட்சியர் அலுவலகம் கட்டி சுமார் நூறு ஆண்டுகளாகின்றன. ஈரோடு கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்புள்ளது. ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம் 1892இல் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் கட்டப்பட்டு 124 ஆண்டுகள் ஆகின்றன. கோட்டாட்சியர் அலுவலக வளாகத்திலேயே பொதுமக்களின் வசதிக்காக, வட்டாட்சியர் அலுவலகத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஈரோடு கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடமாகும். இருந்தபோதிலும், அது பழமையான, உயரமான ஓட்டுக் கட்டடம். தற்போது, நல்ல நிலைமையில், போதுமான இடவசதியுடன் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தை, இடவசதியுள்ள கோட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்கு மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தும், பழைய கட்டடங்களாக இருப்பதையெல்லாம் மாற்றி புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்தும், தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், நல்ல பதிலைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

கால்நடை மருத்துவமனை

***253—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

புரட்சி என்ற வார்த்தைக்குப் பொருளாகவும், அந்தப் பொருளுக்கு உண்மையாகவும், அந்த உண்மைக்குப் பெருமையாகவும், அந்தப் பெருமைக்குப் புகழாகவும் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரலுக்கிடையே வித்தியாசம் பார்க்கும் வேண்டாதவர்கள் இருக்கும்போது, எல்லோரும் என் மக்களே என்று, சாதி, மத, இன, பேதம் பார்க்காமல், அனைவருக்கும் தூய ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)